



இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட எம்.எஸ். நகரில் அமைந்துள்ள நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிகளை, அமைச்சர் தா.மோ. அன்பரசன், சென்னை வடக்கு மாவட்டச் செயலாளரும், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் . ஐட்ரீம் இரா. மூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மேலாண்மை இயக்குநர் திருமதி. ஸ்ரேயா பி சிங் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ. சுரேஷ், மாமன்ற உறுப்பினர் பா.வேளாங்கண்ணி, வட்டச் செயலாளர்கள் கௌரீஸ்வரன், புகழேந்தி, அரசு உயரதிகாரிகள் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி, பொதுமக்கள் பயன் பெறும் வகையில் சிறுபாக்கம் முதல் மங்களூர், மலையனூர், பொடையூர், ஆவட்டி x ரோடு திட்டக்குடி, வயலப்பாடி, புதுவேட்டக்குடி, துங்கபுரம், அரியலூர், கீழப்பழூர், திருமானூர், திருவையாறு வழியாக தஞ்சாவூர் வரை செல்லும் புதிய அரசு போக்குவரத்து கழக பேருந்து வழித்தடத்தை தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், போக்குவரத்துறை அமைச்சர் சிவசங்கர் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

### களக்காடி எல்லப்பன் தலைமை!எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலை!

# சைதை ஜாபர்கான்பேட்டையில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை,செப்.11

சென்னை தெற்கு மாவட்டம்,சைதை மேற்குப் பகுதி தி.மு.க.சார்பில் 139 வது வட்டம், ஜாபர் கான்பேட்டை கங்கையம்மன் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் 117 வது பிறந்த நாளை முன்னிட்டு 15.9.2025 அன்று காலை 6.30 மணிக்கு கழக பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமையில் பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியயாதை செலுத்தி இனிப்பு வழங்கப் படுகிறது.

இந் நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச்செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, பொதுமக்களுக்கு இனிப்புவழங்குகிறார்.

மேலும் இந் நிகழ்ச்சியில் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், வழக்கறிஞர் ப.சுப்பிரமணியன், எம்.எஸ்.அரிபாபு, த.சம்பத், வி.பி.ஜானகிராமன், ஆர். ரமேஷ், கவிதா கௌதமன்,தா. மோகன் குமார், சைதை சாதிக், சை.மு. சேகர், அட்கோ கமலநாதன், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம். நாகா,ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், டி.என்.சிவமணி, ந.மணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், வி.எஸ். முருகன், சாந்தி சுந்தரம், அ.அயாத்பாஷா, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ். பிரகாஷ், பூபதி வெங்கடேசன், சுமதி தீனதயாளன், மு.காளியப்பன், வி.பி.சிவக்குமார், எல்.சந்திரன், சி.டி. காசிநாதன், து.முரளி, அ.சுப்பிரமணி, வி.சபரி, ஜிம்.பிரபு, இரா.சத்யா, க.விக்னேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பாபு எல்லப்பன், திலிப்பன் மதிவாணன், வ.ராஜா ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1ல் திருப்பனந்தாள் ஏரி மற்றும் சூரி அம்மன் குளம் நடைபயிற்சி பாதையை தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழு தலைவர் வே.கருணாநிதி ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். உடன் உதவி செயற் பொறியாளர் சத்தியசீலன், சுகாதார ஆய்வாளர் மாரிமுத்து, 6வது வார்டு மாமன்ற உறுப்பினர் கல்யாணி டில்லி வட்டக் கழக செயலாளர்கள் மாநகர பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழகம் முன்னோடிகள் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### பகுதிச் செயலாளர் எஸ்.முரளி தலைமையில்

# மயிலை கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்!

சென்னை,செப்.11-

மயிலை கிழக்கு பகுதி வட்டக் கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (11.09.2025) காலை 11 மணிக்கு அளவில் மயிலை கிழக்கு பகுதி கழக அலுவலகத்தில் எனது (பகுதிச் செயலாளர் எஸ். முரளி) தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்.

இதில் எஸ். முனுசாமி, சீமன் சேகர், பி.எல்.தாஸ், எ.குமாரி, எல்.உதயகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா . அன்பு, அ.தவனேசன், வெ.வெற்றிவேல், கோ கண்ணன், துரை பார்த்திபன், பா. பொன்னுசாமி, ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி கழகச் செயலாளர் எஸ்.முரளி தெரிவித்துள்ளார்.



தாம்பரம் மாநகராட்சி 4 வது மண்டலத்தில் வார்டு எண் 57 , 58 , ல் மக்களுடன் முதல்வர் குறை தீர்க்கும் முகாம் புதிய பெருங்களத்தூர் சேகர் மஹாலில் நடைபெற்றது. பயனாளிகளுக்கு தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். ஆர். ராஜா மருத்துவ உபகரணங்கள், தொழில் வரி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார்கள். இதில் மேயர் திருமதி வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் டி. காமராஜ், தாம்பரம் தெற்கு பகுதி செயலாளர் எஸ். சேகர் எம் .சி, திருமதி எஸ். கமலா சேகர் .எம் .சி, மதுமிதா மதன் எம். சி. பி. புகழேந்தி ,எம் .சி. பரஞ்சோதி, இளைஞரணி அமைப்பாளர் ப .சுந்தர், ஐசக் ,ஜெயதுரை, மற்றும் கழக முன்னோடிகளும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





